| சாட்சி : DW 1<br>பிச்சை | அ.வ.எண். 120/2017 | 31.01.2024 |
|---|---|---|

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2. சின்னசாமி கவுண்டருக்கும், எனக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சின்னசாமி கவுண்டர் வாதியின் தகப்பனார் வீரனுக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணம் தவறு என்று 1982 முதல் நாளது தேதிவரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வீரன் வாதிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணம் தவறு என்று நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், அவர் எழுதி வைத்தது எனக்கு தெரியாது. நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிர்வழக்குரை மற்றும் எனது பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வாதி தரப்பில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று வாங்கி படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, தற்போது தான் பார்க்கிறேன். எனது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.224/1G ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.224/1G என்பது இல்லை என்றாலும் சர்வே எண்.224 தான் உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது சர்வே எண்.224/1G என்று உள்ளது. நான் எந்த ஆண்டு எனது பெயரில் பட்டா பெற்றேன் என்றால் சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். எனது தகப்பனார் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1967 ல் இறந்துவிட்டார்.

3. எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் குறிப்பிட்டுள்ள உட்பிரிவுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள அளவுகள் சரியானதா என்றால் சரியானது தான், சில வேறுபாடுகள் இருக்கலாம். சர்வே எண்.224/1G என்று எந்த உட்பிரிவும் 2009 க்கு பிறகு இல்லை என்ற விவரத்தை புல வரைபடத்தை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் புல வரைபடத்தை பார்த்தேன். மேற்படி நில புல வரைபடம் தவறு என்று வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஏதேனும் மனு செய்தேனா என்றால் இல்லை. தேசிய நெடுஞ்சாலை எண்.45 அகலப்படுத்தும் பணி 2009 ஆண்டு முடிவடைந்தது என்றால் சரிதான். மேற்படி அகலப்படுத்தும் பணியின் போது எனது சொத்தை ஆர்ஜிதம் செய்து தொகை எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது சொத்து எதுவும் தேசிய நெடுஞ்சாலை துறையால் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.224/1F3 தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் வாதி பெயரில் உள்ளது. எனது எதிர்வழக்குரை பத்தி 9 ல் வாதி கிராம நிர்வாக அலுவலர் வரைபடத்தில் பாதை போல காட்டி உட்பிரிவு செய்துள்ளார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் மேற்படி வாதி எந்த தேதி, மாதம், வருடம் அவ்வாறு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் வாதி எதுவும் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. எனது எதிர்வழக்குரை பத்தி 15 ல் எனக்கு சொந்தமான சொத்தின் ஒரு பகுதி வாதியின் சர்வே எண்.224/1F3 ல் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் மேற்படி வாதியிடத்தில் சேர்க்கப்பட்ட எனது சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் எவ்வளவு என்றால் கிழமேல் 30 அடி, தென்வடல் 7 அடி ஆகும். நான் சொல்லும் மேற்படி இடம் தாவா பி அட்டவணை சொத்தில் குறிப்பிட்டுள்ள சந்து பாதை என்றால் சரிதான். வருவாய் ஆவணத்தில் சந்து என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்று நான் நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்கிறேன் என்றால் சரிதான். வாதிக்கும், எனக்கும் மேற்படி சந்து சம்மந்தமாக எத்தனை ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் 2009 ம் ஆண்டிலிருந்து பிரச்சனை இருந்து வருகிறது. மேற்படி சந்து பாதையை நான் அனுபவம் செய்வதை வாதி இடையூறு செய்யவில்லை என்றாலும் நானும் வாதி சந்து பாதையை அனுபவம் செய்வதை இடையூறு செய்யாமல் இருந்து பிரச்சனை முடித்து கொள்ளலாம் என்றாலும் அவ்வாறு முடித்து கொள்ள முடியாது. எனக்கும், வாதிக்கு சந்து பிரச்சனை வந்ததிலிருந்து எத்தனை முறை எங்கள் சொத்துக்களை சர்வேயர் மூலம் அளந்தோம் என்றால் இரண்டு முறை அளந்தோம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது பெரியப்ப உலுவ கவுண்டர் மகன் பெயர் என்ன என்றால் சின்னசாமி ஆகும். உலுவ கவுண்டர் மகன் உலுவ கவுண்டர் என்று கண்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். மேற்படி உலுவ கவுண்டருக்கு எத்தனை மகன் மற்றும் எத்தனை மகள் என்றால் ஒரே ஒரு மகன் மட்டும் தான் ஆவார், அவர் பெயர் சின்னசாமி ஆகும், மேற்படி சின்னசாமி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார்.

5. மேற்படி சின்னசாமி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் கொடுத்து இவ்வழக்கில் தாக்கல் செய்ய சொன்னாரா என்றால் ஆவணம் என்னிடம் தான் இருந்தது. பி.வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள சொத்தின் உரிமையாளர் சின்னசாமி தான் என்றாலும் தாவா சொத்திற்கும் மேற்படி ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சின்னசாமி வீரனுக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை எழுதி கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் உரிமையாளர் சின்னசாமி தான் என்றாலும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் நான் உரிமை கோர எனக்கு எந்த மூகாந்திரமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சர்வே எண்.224/1F3 ல் 7 X 30 அடிகள் சேர்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் மேற்படி சொத்தை எனக்கு சுவாதீனம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று எதிர்கோரிக்கையோ அல்லது வழக்கு எதுவும் தாக்கல் செய்யாமைக்கு காரணம் எதுவும் இல்லை என்றால் அளந்து தான் மீட்க வேண்டும்.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக 07.02.2024 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)